**மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.ரா.சரவணக்குமார்**

நாள் : 17.05.2024

அனுமதி எண் : 1/2024-2025

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம்- தூத்துக்குடி மாவட்டம் -தூத்துக்குடி உள்ளூர் திட்டப்பகுதி - தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்றம் கிராமம் -சர்வே எண் 155/5B ல் 8500ச.மீ (2.10 ஏக்கர்) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1)நகர் ஊரமைப்பு தூத்துக்குடி மாவட்ட துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் .19799/2020 தூ.மா.அ1 நாள் :24.12.2020

2)சாலை உள்ளாட்சிக்கான இடம் மற்றும் மின்வாரியத்திற்கான இடத்திற்கான ஒப்படைப்பு தானப்பத்திர எண் 2025/2024 நாள் : 18.04.2024

3)மனுதாரர் திரு.J.அந்தோணி ராஜ் விண்ணப்பம் நாள் : 20.03.2024 (மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் துணை இயக்குநர் தூத்துக்குடி அவர்களுக்கு முகவரியிட்டது)

4)ரசீது எண் : 17-2024/2025 நாள் :17.05.2024

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி உள்ளூர் திட்டப்பகுதி தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 155/5B ல் 8500ச.மீ (2.10 ஏக்கர் ) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1- ல் கண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.பார்வை (4) ல் கண்ட தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டு பார்வை (5) ல் கண்ட ரசீதுபடி ஊராட்சி கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கீழ்காணும் பொது நிபந்தனைகளுடன் "இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம்" வழங்கி ஆணையிடப்படுகிறது.

1.மேற்காணும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் பூங்கா மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும் இதில் எவ்வித விதிமீறலும் அனுமதிக்கப்படாது.

2.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் .

3.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

4.மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட நுழைவுவாயில் '6*4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்க வேண்டும் .

6.பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைப்பிரிவுகளுக்கு பொருந்தும்.

தலைவர்
மாப்பிள்ளையூரணி ஊராட்சி

இணைப்பு:

சர்வே எண் 155/5B ல்
மாப்பிள்ளையூரணி கிராமத்தில் அமையும்
குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் -1 எண்ணிக்கை

பெறுநர் :

திரு.J.அந்தோணிராஜ்
8/142 பாலதண்டாயுத நகர்
ஆரோக்கியபுரம் (PO)
மாப்பிள்ளையூரணி

நகல் :

1.சார்பதிவாளர் அவர்கள் தூத்துக்குடி கீழூர் அலுவலகம்
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
தூத்துக்குடி மாவட்ட அலுவலகம் தூத்துக்குடி-2
3.வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி )
தூத்துக்குடி (இருப்பு) புதுக்கோட்டை
4.மாப்பிள்ளையூரணி ஊராட்சி இருப்பு கோப்பு